An Institute of

NANYANG TECHNOLOGICAL UNIVERSITY SINGAPORE

NIE NATIONAL INSTITUTE OF EDUCATION SINGAPORE

NTU OPEN HOUSE 2024

# Tamil Studies

MORE THAN A SCHOLARSHIP JOIN TSP

The Teaching Scholars Programme is a premier scholars programme by Nanyang Technological University and it is administered by the National Institute of Education (Singapore).

Follow us bit.ly/niete

Scan here for more information

# National Institute of Education
## Asian Languages and Cultures Academic Group
## Tamil Language and Culture Division

தமிழ்மொழி, பண்பாட்டுத்துறை தமிழாசிரியராக விரும்பும் விண்ணப்பதாரர்களுக்குப் பணிக்கு முந்திய பயிற்சிகளையும் பணியிடைப் பயிற்சிகளையும் வழங்குகிறது. இப்பிரிவு, கல்வியியல் பட்டய வகுப்பு **(Dip.Ed),** பட்டத்திற்குப் பிந்திய கல்வியியல் பட்டய வகுப்பு **(PGDE),** இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் / கல்வியியல்) **(B.A.(Ed.)),** முதுகலைத் தமிழ் ஆய்வு வகுப்பு **(M.A.),** முதுகலைக் கல்வியியல் வகுப்பு **(M.Ed.),** முனைவர் பட்டம் **(PhD),** துறைத்தலைவர்களுக்கான பள்ளி நிர்வாகமும் தலைமைத்துவமும் **(MLS)** ஆகிய பயிற்சித்திட்டங்களை வழங்கி வருகிறது.

தேசியக் கல்விக்கழகம் 2016ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல், தமிழில் இளங்கலை (கல்வியியல்) பட்டக்கல்வியையும் (B.A.(Ed.)) வழங்கி வந்துள்ளது. இப்போது வரும் ஆகஸ்டு 2023 முதல், இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் / கல்வியியல்) (B.A. Double Major/Education என்ற பெயரில் தமிழியலையும் கல்வியியலையும் (Tamil Studies & Education) பட்டக்கல்வியில் வழங்கவுள்ளது. இந்தப் பட்டக்கல்வி வகுப்பு, திறன்மிகு விண்ணப்பதாரர்கள் கல்வியியலில் பொருள் பொதிந்த பயணத்தை மேற்கொள்ளும் வகையில் ஒரு பெரும் வாய்ப்பை வழங்குகிறது. இது விருப்பமுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்தம் பட்டத்தொழிலுக்கான திறன்களையும் பணி முன்னேற்றத்தையும் மேலும் சிறப்பானதாக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்தப் பட்டவகுப்புப் பயிற்சி, மாணவ ஆசிரியர்கள் தம் வகுப்பறைகளிலும் அவை சார்ந்த நடைமுறைகளிலும் செம்மையாகக் கற்பிக்க வழிவகை செய்கிறது; தமிழ்மொழி, இலக்கியம், தமிழ் தொடர்பான புலங்கள், கல்வியியல் ஆகியனவற்றின் மீதான ஆழமான புரிந்துணர்வையும் அவர்களுக்கு வழங்குகிறது.

### கற்றல் விளைவுகள்:


**இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் / கல்வியியல்) (B.A., Double Major/Education என்ற பெயரில் அமையும் பட்டக்கல்விக்கான பயிற்சியின் இறுதியில் மாணவ ஆசிரியர்கள் பின்வருவனவற்றில் மேம்பட்டிருப்பர்:**

- தமிழ்மொழி, இலக்கிய உள்ளடக்கங்களில் ஆழமான புரிந்துணர்வைப் பெற்றிருத்தல்
- பல்வேறு வகையான ஆசிரியவியல் புலங்களையும் அவற்றிற்கான காரணகாரியங்களையும் புரிந்து வைத்திருத்தல்
- தாம் பெற்ற ஆசிரியவியல் அறிவை வகுப்பறை நடைமுறைகளில் பயன்படுத்துதல்
- பட்டத்தொழில் மேம்பாட்டுக்கான சீரிய, செம்மையான எழுத்துத் திறன்கள், தொடர்புத் திறன்கள் போன்ற பயன்மிக்க திறன்களை மேம்படுத்திக்கொள்ளுதல்
- ஆய்வுத் திறன்கள், கற்பித்தல் திறன்கள் போன்ற இன்றியமையாத திறன்களைப் பெற்றிருத்தல்
- தினசரி வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் அற இலக்கியக் கருத்துகளைப் பாடங்களில் இணைத்துக் கற்பிக்கும் பல்வேறு வழிமுறைகளை அறிந்திருத்தல்

BA Double Major Programme
NIE-NTU TEACHING SCHOLARS PROGRAMME
Tamil Studies & Education

MAJOR: TAMIL STUDIES & EDUCATION
தமிழியலும் கல்வியியலும்

MINOR: Tamil Literature & CCE(NIE)
தமிழ் இலக்கியமும்
நற்பண்பு குடியியல் கல்வியும்



# மாணவர்களின் கருத்துக்கள்



“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”
என்கிற வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இணங்க, எந்த அளவுக்குக் கற்றலை நாம் ஆழப்படுத்துகிறோமோ, அந்த அளவிற்கு அறிவானது மேம்படும். கற்றலை ஆழப்படுத்த நமக்குப் பெரிதும் உதவுவோர், நம் ஆசிரியப் பெருமக்களே ஆவர். அவ்வகையில் தேசியக் கல்விக்கழகத்தில் எனக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள், சிறந்த கல்வியை வழங்குவோராகத் திகழ்வதோடு, நாங்கள் முன்னேறப் பெரும் ஊக்கமாகவும் விளங்குகின்றனர். **செல்வி நந்தினி**



தேசியக் கல்விக்கழகத்தின் மூலம் சுவிட்சர்லாந்தில் சூரிக் என்னும் நகரத்தில் தங்கிப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு ஆசிரியர் கற்றலுக்கான பல்கலைக்கழகத்தில் பயின்றதன் மூலம் சுவிட்சர்லாந்தின் கற்றல்-கற்பித்தல் முறையைத் தெரிந்து கொண்டேன். அந்த அனுபவம் எனக்குள் கற்றல்,கற்பித்தல் பற்றிய புதிய எண்ணங்களைத் தோற்றுவித்தது. **செல்வி பாவனா**



சிங்கப்பூர் தேசியக் கல்விக்கழகத்தில் வழங்கப்பட்டு வரும் நான்கு ஆண்டு தமிழ்ப் பட்டக்கல்வி, தமிழில் அதீத நாட்டமுள்ள, ஆசிரியப்பணியில் ஈடுபாடுள்ள மாணவர்களுக்கு ஏற்றப் பட்டக்கல்வி. தமிழ்மொழியின் வரலாற்றைப் பற்றி கற்றுக்கொண்டு, தமிழ் இலக்கியங்களின் மூலம் தமிழ்மொழியின் இனிமையை உய்த்துணர்ந்து, நம் மொழியின் சிறப்புகளைப் பற்றி மென்மேலும் தெரிந்துகொள்வதற்கு இந்தப் பட்டக்கல்வி சிறந்த தளமாக அமைகின்றது. **செல்வி மரியா**




தேசியக் கல்விக்கழகத்தில் பயிலும் வாய்ப்பை ஒரு வரமாகக் கருதுகிறேன். தமிழ்மொழியைப் பற்றி மட்டுமல்லாமல் தமிழ் கற்றல் கற்பித்தல் குறித்துப் பல நுட்பமான செய்திகளையும் நான் இங்குப் பயின்றுள்ளேன். வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தியும் பார்ப்பேன். **செல்வி நந்தினி**



நான் தேசியக் கல்விக்கழகத்தில் முதலாமாண்டுப் பட்டக்கல்வி பயிலும் மாணவ ஆசிரியர். தமிழ் வரலாறு, ஒலியியல், சொல்லியல், தமிழ் இலக்கண நூல்கள், தமிழ் மொழியைக் கற்பிக்கும் முறைகள் முதலியவற்றை இக்கழகத்தில் உள்ள விரிவுரையாளர்கள் எனக்கு அறிமுகம் செய்தனர். இங்கு உள்ள மேம்பட்ட தொழில்நுட்பக் கருவிகளும் கற்றல் வளங்களும் என்னைப் பிரமிக்க வைத்தன! **செல்வி கஜோல்**



தேசியக் கல்விக்கழகத்தில் நான் தமிழ் படிக்கத் தொடங்கிய நாள் முதல் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு வருகிறேன். ஓர் ஆசிரியர் வகுப்பில் எவ்வாறு செயல்பட வேண்டும், அவர் எவ்வாறு பாடத்திற்குத் தயார் செய்யவேண்டும் என்பன போன்ற உத்திகளைச் சக மாணவர்களோடு சேர்ந்து நானும் கற்றுக்கொண்டேன். **செல்வி ஸ்ருதிகா**



நான் பட்டக்கல்வி படிக்க ஆரம்பித்து ஒரு பருவம் மட்டும்தான் முடித்திருந்தாலும், இந்தக் குறுகிய காலத்தில் எனது தமிழ் அறிவும், தமிழ் மேல் இருக்கக்கூடிய பற்றும் அதிகரித்துள்ளன. **செல்வி பிரியா**




ஆசியப் படைப்பிலக்கிய எழுத்துத் திட்டம் 2022-இன் வருகையாளர் முனைவர் பெருந்தேவி ஸ்ரீநிவாசன் அவர்களின் விரிவுரையும் கலந்துரையாடலும்




வாராந்திர மாணவ ஆசிரியர் கருத்தரங்க நிகழ்வில் கல்வியாளர்களுடனான சந்திப்பும் கலந்துரையாடலும், 2022.



தமிழ்மொழி, பண்பாட்டுத்துறை நடத்திய இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றும் பொங்கல் கொண்டாட்டம் 2022



தேசியக் கல்விக்கழகத் தமிழ்மொழி, பண்பாட்டுத்துறையின் தீபாவளிக் கொண்டாட்டம் 2022




உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்திற்குக் கற்றல் பயணம் மேற்கொண்ட மாணவ ஆசிரியர்கள்